## முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண். 137/2019.வா.சா.  3.சுப்புலட்சுமி

2026 ம் ஆண்டு  பிப்ரவரி மாதம் 25 ம் தேதியில் வாதி தரப்பு சாட்சியாகிய, வா.சா.3 ஆன சுப்புலட்சுமி என்பவரின் வாக்குமூலம் (1969 ஆண்டு 44 வது விதியின்படி) திருமதி. R. சுஜாதா., B.Sc., L.L.M., முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி  அவர்களால் ஆணையிட்டு உறுதியளிக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | – | சுப்புலட்சுமி | தொழில் | – | |
| த/பெ க/பெ | – | கணேசன் | ஜாதி | – | |
| கிராமம் | – | வேட்டைக்காரன்புதூர் | வயது | – | 60 |
| தாலூக்கா | – | ஆனைமலை | தேதி | – | 25.02.2026 |

முதல் விசாரணை

நான்  வேட்டைக்காரன்புதூரில் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

| Sl.No. | Date | Exhibits Marked | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1 | | **வா.சா.ஆ. 10** | வா சா 3 எனது ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வாதிகள் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தம்பம்பதி ரோட்டிற்கு வடபுறம் வாய்க்கால் செல்கிறது. வாய்க்காலுக்கு வடபுறம் 30 தென்னை மரங்கள் உள்ளன, மேற்படி தென்னைமரங்கள் உள்ள தோப்பிற்கு செல்லும் போது 1,2 பிரதிவாதிகளான பாக்கியமும், குருசாமியும் ரகளை செய்ததால்

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். நீலவேணி, கண்ணம்மாளின் தோப்பு எந்த பக்கம் உள்ளது என்றால் வாய்க்காலுக்கும், ரோட்டிற்கும் தென்புறத்தில் உள்ளது.

2) நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் உள்ள வழக்கின் விவரங்கள் யார் சொல்லியது என்றால் வாதிகளான நீலவேணியும், கண்ணம்மாளும் கூறினார்கள். பி ஏ பி வாய்க்காலுக்கு வடபுறமாக தென்னை மரம் உள்ளதாக கூறியுள்ள நிலையில் அது போன்று எவ்வித தென்னை மரங்களும் வாதிகளுக்கு பி ஏ பி வாய்க்காலுக்கு வடபுறமாக இல்லை என்றால் உள்ளது. நான் அவர்களது தோட்டத்திற்கு வேலைக்கு செல்வேன். 30 தென்னை மரங்கள் உள்ளதாக கூறும் இடம் 6 , 7 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரியல்ல.

3) மேற்படி தென்னை மரங்கள் உள்ளதாக கூறப்படும் இடம் பி ஏ பி வாய்க்காலை பராமரிப்பதற்காக விடப்பட்ட இடம் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும், வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி